Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 78/2025 PW-1**

Name : சிவக்கொழுந்து
Father / Husband name : ஆறுமுகம்
Village : கோட்டக்குப்பம்
Age : 41
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 02.02.2026

A1, A2 present. APP present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கோட்டக்குப்பம் மதுவிலக்கு சோதனைச்சாவடியில் தலைமைக்காவலராக பணிபுரிகிறேன். கடந்த 2021 ம் ஆண்டு திண்டிவனம் மதுவிலக்குப்பிரிவில் ஆய்வாளருக்கு வாகன ஓட்டுநராக இரண்டாம் நிலைக்காவலராக பணியிலிருந்தபோது 14.06.2021 ம் வருடம் மாலை சுமார் 05.30 - 05.45 மணியளவில் நான் மதுவிலக்கு பணியாக வடஆலப்பாக்கம் ரோட்டில் மதுவிலக்கு பிரிவிற்கு திரும்பும்போது எனது வாகன எண் PY 01 CM 5861 பல்சர் வாகனத்தில் வரும்போது இன்டிகேட்டர் போட்டு திரும்பியபோது பின்னால் வந்த PY 01 CM 5512 Avenger வாகனத்தில் வந்த வடஆலப்பாக்கத்தை சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் வலது பக்கமாக என்னை முந்தி சென்றார், அப்போது எதற்காக இவ்வாறு செல்கிறீர் என்று நான் கேட்டதற்கு போலிஸ்னா பெரிய பூலா என்று கேட்டு எனது சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். பின்னர் எதிரியின் ஊரைச்சேர்ந்த ராஜ்குமார் வந்து யாருடா உன்னிடம் சண்டைபோட்டது என்று எதிரி ராஜேந்திரனிடம் கேட்டு எதிரி ராஜ்குமாரும் என்னை கீழே தள்ளி அசிங்கமாகபேசி எனது இடது பக்க கன்னத்தில் கையால் அடித்து உதட்டின் அருகே காயம் ஏற்பட்டது. அங்கிருந்த காவலர்கள் முருகையா மற்றும் சிவக்குமார் சம்பவத்தை கேள்விபட்டு வந்து சண்டையை விளக்கி அடிப்பட்ட என்னை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு

அழைத்துச்சென்றார். பின்னர் 06.30 மணிக்கு திண்டிவனம் காவல் நிலையம் வந்து சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 78/2025 PW-2**

Name : முருகையா
Father / Husband name : அண்ணாதுரை
Village : திண்டிவனம்
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 02.02.2026

A1, A2 present. APP present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டிவனம் நகர காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிகிறேன். கடந்த 2021 ம் வருடம் திண்டிவனம் மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமைக்காவலராக பணியிலிருந்தபோது 14.06.2021 ந் தேதி மாலை சுமார் 05.45 மணியளவில் என்னுடன் பணிபுரியும ம. மு.நி.கா. 1934 சிவக்கொழுந்து என்பவர் காவல் நிலைய வேலையாக வெளியில் சென்று வடஆலப்பாக்க ரோட்டில் முகாமிற்கு வந்துகொண்டிருந்தார். அப்போது அவருக்கு சொந்தமான PY 01 CM 5861 பல்சர் வாகனத்தில் வலது பக்கமாக திரும்பியபோது அவருக்கு பின்னால் வந்த நபர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்துகொண்ட நபர் PY 01 CM 5512 அவேஞ்சர் வாகனத்தில் ஓத்தா தேவிடியா என்று அசிங்மாக சிவக்கொழுந்தை திட்டினார், அப்போது அ.சா.1 நான் போலிஸ் என்று சொல்லி இன்டிகேட்டர் போட்டு தான் திரும்பினேன், என்னை ஏன் திட்டுகிறார் என்று கேட்டதற்கு அவரின் வாகனத்தை நிறுத்திவிட்டு வந்து அ.சா.1 ன் சட்டையை பிடித்து இழுத்து கிழே தள்ளி, அவரின் மீது ஏறி உட்கார்ந்துகொண்டு அவரின் கழுத்தை பிடித்து நெறித்ததாகவும், அப்போது மதுவிலக்கு அமல்பிரிவில் நான் பாராவில் இருந்தேன், என்னுடன் 533 த.கா. சிவக்குமார் என்பவர் சிவக்கொழுந்தின் அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்து பார்த்தபோது அவர்கள் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். வடஆலப்பாக்கத்தை சேர்ந்த ராஜேந்திரன்,

அவரின் தம்பி ராஜ்குமார் ஆகியோர்கள் அ.சா.1 ஐ திட்டி அடித்துக்கொண்டிருந்தார்கள். எதிரி ராஜ்குமார் அ.சா.1 ஐ கீழே தள்ளி அடித்ததில் உதட்டில் காயம் ஏற்பட்டது. நானும் சிவக்குமாரும் சண்டையை மறித்து அடிப்பட்ட அ.சா.1 திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். பின்னர் அ.சா.1 திண்டிவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.